International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 04 October to December 2021 www.irjtsjournal.org

# சங்ககால ஒளவையை கூத்தரங்கில் வெளிப்படுத்தியமை: ஈழத்துக் கூத்துமீளுருவாக்கத்தைமையப் படுத்திய ஓர் ஆய்வு

T.Gowrieeswaran,
(B.A(Hons), M.Phil (Drama and Theatre),PGDE)
Lecturer, Department of Fine Arts, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.

து.கௌரீஸ்வரன்,
(B.A(Hons), M.Phil (Drama and Theatre),PGDE)
விரிவுரையாளர்,நுண்கலைத்துறை,கலைகலாசாரபீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ்ப்பண்பாட்டில் ஒளவைஎனும் பெயர் மிகுந்தசெல்வாக்குப் பெற்றதாக இருந்துவருகின்றது. மிகப் பெரும்பாலும் சிறுவயதிலிருந்தே ஒளவையைப் பற்றி அறிந்து கொள்ளும் நிலைமை ஒவ்வொருவருக்கும் வாய்க்கப்பெறுகின்றது. ஒழுங்கமைக்கப் பட்டுள்ள கல்வித்திட்டங்களுடாகவும் உள்ளுர் வாய்மொழிக் கதைகளுடாகவும் ஒளவை ஒவ்வொருவருடையமனதிலும் ஆழமாக அறிமுகமாக்கப்பட்டுவருகின்றார். தமிழர் பண்பாட்டு மரபில் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு ஒளவைகள் வாழ்ந்துள்ளபோதிலும் ஆத்திசூடிபாடிய கூன்விழுந்தவயதுமுதிர்ந்த ஒளவையே ஒளவையாராக பொதுப்புத்தியில் ஆழமாகவேர் கொள்ளச் செய்யப்பட்டிருக்கின்றார். கட்புலமூடாகவும், கருத்துப்புலமூடாகவும் வயது முதிர்ந்த ஒளவைப்பாட்டியே வெளிப்படுத்தப்படுகின்றார். இவ்வாறுபொதுப்புத்தியில் ஒளவையின் படிமம் இருக்கின்ற அதேவேளை ஒளவைகள் பலர் என்பதும் அதில் சங்ககாலத்து ஒளவை மிகவும் முற்போக்கானபெண் ஆளுமைஎன்பதும் பல்வேறுஆராய்ச்சியாளர்களாலும் எடுத்துக் காட்டப்பட்டு அதியமானுடன் நட்புக்கொண்டிருந்த சங்ககாலத்து ஒளவையின் முக்கியத்துவம் பற்றியும் அந்தஒளவையினைப் பொதுப்புத்தியில் பதிவாக்கஞ் செய்யவேண்டும் என்பதுபற்றியும் வலியுறுத்தப் பட்டுவருகின்றது. இத்தகைய ஆராய்ச்சியும், முடிவுகளும், பரப்புரைகளும் இவைசார்ந்த ஆய்வறிவாளர்களுடனும், குறைந்தளவிலான வெகுமக்களுடனும் மட்டுப்பட்டதாக இருந்துவருவதனையும் அவதானிக்கமுடிகின்றது. எனவேசங்க காலத்து ஒளவையின் ஆளுமைகள் குறித்துசமூகத்தின் பல்வேறுமட்டங்களிலும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதும் அது பற்றி உரையாடச் செய்வதும் முக்கியமானது என்ற நோக்கத்துடன் சங்க காலத்தில் வாழ்ந்த

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

ஔவையினை கூத்தரங்கில் பாடுபொருளாக்கிபரவலாக்கம் செய்யும் முயற்சி ஈழத்துக் கூத்துமீளுருவாக்கத்திற்கான ஆய்வுச் செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக அழகியற் கற்கைகளுக்கானஉயர்கல்விநிறுவகத்தின் நாடகத்துறையினைச் சார்ந்து இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் கூறப்படுகின்றது. விவரணஆய்வு, பங்குகொள் ஆய்வு முறைமைகளுடாக முன்வைக்கப்படும் இக்கட்டுரைக் கானதரவுகளாக சங்ககாலத்து ஔவைபற்றிய ஆய்வறிவாளர் கருத்துக்களும், ஆளுமையானஔவையாள் எனும் கூத்துப்பனுவலும், ஆய்வாளரின் பங்குகொள் அனுபவங்களும் கொள்ளப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்** - ஆணாதிக்கம், பெண்ணிலைவாதம், ஊடகங்கள், வரலாற்றைக்கட்டமைத்தல்

**அறிமுகம்:**

தமிழ்ச் சூழலில் ஔவை எனும் பெண் புலவர் பற்றியசெய்திகள் சிறுவயதிலிருந்தே ஒருமனிதரிடம் பதிவாக்கஞ் செய்யப்பட்டுவருகின்றது. ஔவைஎனும் பெண் புலவர் வயது முதிர்ந்த ஔவைப்பாட்டியாராகவே பொதுவாகப் பதிவாக்கஞ் செய்யப்பட்டுள்ளார். கட்டமைக்கப்பட்டுள்ள கல்வித் திட்டங்களுடாகவயது முதிர்ந்த ஔவையாரே ஆழமாகபதிவாக்கப்பட்டுவருகின்றார்.

இது மாத்திர மன்றி நவீனவெகுசனக் கலையாக்கங்களிலும் வயது முதிர்ந்த ஔவையாரே ஔவைக்குரிய பொதுப் படிமமாகச் சித்திரிக்கப்பட்டு வெகு மக்களின் மனங்களில் பதிவாக்கப்பட்டுள்ளார். இதனைப் பின்வரும் மேற்கோள் மேலும் உறுதிப்படுத்துகின்றது.
“வெகுசன ஊடகங்களானநாடகமும் திரைப்படமும் இத்தகைய முதுமையான ஔவை உருவாக்கத்திற்கு நிறையப்பங்களித்துள்ளன. எஸ்.எஸ். வாசனின் திரைப்படம், ஔவைசண் முகத்தின் நாடகம் ஆகியவைஅதில் பெரும் பங்குவகித்துள்ளன.” (சித்திரலேகா.மௌ,2007:26)

இப்பின்புலத்தில் பெண்ணிலைவாத நோக்கிலான ஆராய்ச்சிகள் “வித்தியாசங்களையுடைய ஔவைகள் பற்றி அவ்வப்போது அவதானிக்கப்பட்டிருப்பினும் தமிழ் இலக்கிய மரபிலும் பொதுவான நினைவாற்றலிலும் (Popular Memory) ஔவை ஒருவர் என்பதே நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அந்த ஔவைவயது முதிர்ந்த கூன் விழுந்த ஔவையாகநித்திய முதுமகளாக வேவடிவமைக்கப ்பட்டுள்ளார்” (சித்திரலேகா.மௌ,2007:15) என்பதைச் சுட்டிக்காட்டி“வெவ்வேறுகாலங்களில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் ஔவைகளைக் கலவையாக்கித் தந்தார்கள்” (இன்குலாப், 2000) என்பதையும் வெளிப்படுத்தியுள்ளன.


© 2021, IRJTSR

அத்தோடு“
சங்ககாலத்து ஔவைதமிழ் இலக்கியத்தின் முதல் பெண் குரலைவெளிப்படுத்துகிறாள். தாயின் துன்பத்தையும், காதலின் வேகத்தையும் இன்பத்தின் களிப்பையும் பாடியவளாகஉள்ளாள். அச்சமும் நாணமும் மடமும் தவிர்த்தவையாகஅவளதுபாடல்கள் அமைந்துள்ளன.” (சித்திரலேகா.மௌ,2007:25) என்பதையும்,

ஆளுமைமிக்க புலவராக விளங்கிய சங்ககாலத்து ஔவை பற்றிய வெளிப்படுத்தல்கள் இல்லாமலேயே செய்யப்பட்டுள்ளன. “சங்க கால ஔவைதொலைந்து போய்விட்டாள். ஆடவரின் ஆதிக்கங்களை அறநெறிகளாகஏற்றுக் கொண்டபிற்கால ஔவைகள் முன்னிறுத்தப்பட்டனர். ஔவை ஔவையாராக மாற்றப்பட்டாள்” (இன்குலாப், 2000) என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளன.

இத்தகைய வடிவமைப்பைக் கட்டுடைத்து, வளமான, வெவ்வேறு பண்புகளையுடைய, வித்தியாசங்களைப் புலப்படுத்தும் ஔவைமரபுகளை இனங்காண்பதும் முதுமைச் சிறைக்குள்ளும் இருந்து இம்மரபுகளை வெளிக் கொண்டுவருதலும் இன்றுபெண்கள் இலக்கியத்தைக் கற்போருக்கு முன்னுள்ளகடமையாகும் (சித்திரலேகா.மௌ,2007:27) என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இப்பின்னணியில் சங்ககாலத்தில் வாழ்ந்தஅதியமான் எனும் சிற்றரசனுடன் நட்புக்கொண்டு ஓர் அரசியல் இராசதந்திரியாகவும் இயங்கிய இளம் பெண் ஆளுமையான ஔவையினை வெளிப்படுத்தும் கலை இலக்கியப் படைப்பாக்கமுயற்சிகளில் ஈடுபடவேண்டியதன் அவசியம் பேசுபொருளாகியது. இந்தவகையில் தமிழகத்தைச் சேர்ந்தகவிஞர் இன்குலாப் அவர்களினால் ஔவைஎனும் நாடகம் ஆக்கப்பட்டது. “ஔவைப்பாட்டி என்கின்ற பிரபல்யமானபடிமத்தை மறுவாசிப்புச் செய்வதாகவே அவரதுநாடகப் பிரதிஅமைந்துள்ளது. சங்ககால ஔவையிலிருந்து சமகாலத்தவரும் ஈழத்துப் பெண்கவிஞைகளில் ஒருவருமான ஔவைவரை வெவ்வேறு ஔவைகளை இந்நூல் தொட்டுச் செல்கிறது. நாடகப் பிரதியின் குவிமையம் சங்ககால ஔவையை முன்னிறுத்துவதாகவே அமைந்துள்ளது. இந்தநாடகப் பிரதியை தமிழ்நாட்டு நாடக இயக்குனரான அ.மங்கைமேடை நாடகமாக ஆக்கினார். (சித்திரலேகா.மௌ,2007:27)

ஈழத்துக் கவிஞரான சி.ஜெயசங்கர் அவர்கள் தனது கவிதையிலே சங்ககால ஔவை பற்றிப் பின்வருமாறு பாடியுள்ளார்

நிலவுக்குச் சொந்தக்காரர் யாரம்மா?
நிலவுதான் சொந்தம் எவருக்கும் தானம்மா!

ஔவைக்குச் சொந்தக்காரர் எவரம்மா?


© 2021, IRJTSR

ஔவைதான் சொந்தம் பார் எமக்கம்மா!

பாட்டியென்று அவளைத்தான் படைத்தவர் யார்?
பாட்டிலுள்ள படியென்றால் அவள் இளையவள்தான்

மன்னருக்குமதியுரைக்கும் மாண்புடையாள்
பொதுமக்களுக்கும் வழியுரைக்கும் சால்புடையாள்

கல்விகேள்விவல்லவளாய் அவள் திகழ்ந்தாள்
கள்ளுண்டுகருத்தாடும் வழக்குடையாள்

நட்புக்கு இலக்கணமாய் அவள் திரிந்தாள்
மன்னன் அதியனிடம் நெல்லிக்கனிதான் பெற்றிருந்தாள்

போர் முனையும் மன்னரையேபொறுக்கச் செய்வாள்
பொதுமக்கள் குரலெனவேஔவைவாழ்ந்திருந்தாள்

இவ்விதமாக தமிழ்ச்சூழலில் ஔவை பற்றிய கட்டமைப்புக்கள் கட்டவிழ்க்கப்பட்டு சங்ககாலத்தில் வாழ்ந்த ஔவையினை மையப்படுத்திய உரையாடல்கள் கலை இலக்கியப் படைப்பாக்கங்களில் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில். ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில் சங்ககாலத்து ஔவையினை மையப்படுத்திய கூத்து உருவாக்கப்பட்டுள்ள மைகவனிப்பிற்குரியதாக இருக்கின்றது.

**கூத்தரங்கும், கூத்துமீளுருவாக்கமும்:**

ஈழத்தில் பாரம்பரியஉள்ளூர் நிகழ்த்துகலைவடிவமாக கூத்தரங்குபயிலப்பட்டுவருகின்றது. இக்கூத்தரங்கில் 1960 களில் நவீனநோக்கிலானசெயற்பாடுகள் கூத்துச்செம்மையாக்கம் எனும் பெயரில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்செயற்பாடானது கூத்தரங்கைபடச்சட்ட மேடைக்குரிய அழகியல் பெறுமானங்களுக்குரியதாக மாற்றியமைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டது. குாலனிய நீக்கத்திற்கான நடவடிக்கைகள் முக்கியப்படுத்தப்பட்டுவரும் இன்றையகாலத்தில் கூத்துச்செம்மையாக்கம் எவ்வாறுகாலனிய கருத்தியல்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது வெளிப்படுத்தப்பட்டு காலனிய நோக்கிலிருந்து விலகிபாரம்பரியக் கூத்தரங்கில் செயற்பாடுகளைமுன்னெடுக்கவேண்டியதன் அவசியத்தைவலியுறுத்தும் உரையாடல்கள் தற்போதையகாலத்தில் வலுப்பெற்றுவருகின்றன.

காலனியநீக்கச் சிந்தனைகளுடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாக கூத்துமீளுருவாக்கம் இடம்பெற்றுவருகின்றது. 2002 ஆம் ஆண்டிலிருந்து முன்மொழியப்பட்டுவரும் கூத்துமீளுருவாக்கம் கூத்தரங்கினை சமுதாய அரங்காகவலியுறுத்துகின்றது. அதன் அழகியலைகாலனிய நோக்கிலிருந்து அணுகுவதை விடுத்துகாலனியநீக்க அணுகு முறைகளுடன் முன்மொழிகின்றது.


© 2021, IRJTSR 

சமூகத்தின் பல்வேறு மனிதர்களினதும் ஒன்றிணைவினைவலுப்படுத்தும் சமூதாயஅரங்காக இயக்கம் பெற்றுவரும் கூத்தரங்கு இன்றைய பூகோளமயமாக்க அரசியல் பொருளாதார நுகர்வுப்பண்பாட்டு உருவாக்கச் சூழலில் உள்ளூர்ப் பண்பாடுகளைத்தக்கவைத்து முன்கொண்டு செல்வதற்கான முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளதாகவும், அதேவேளை பெரும்பாலும் காலத்திற்கு பொருத்த மற்ற ஆணாதிக்க, சமூகஏற்றத்தாழ்வுச் சிந்தனைகளைவலுப்படுத்தும் பாடுபொருளைக் கொண்டதாகவும் உள்ளது என்பதை சுட்டிக்காட்டி இப்பாடுபொருளை கூத்தரங்கில் பங்குகொள்ளும் மனிதர்களின் கருத்துவிளக்கத்துடன் இன்றையகாலத்தின் தேவைகளுக்கேற்பமீளுருவாக்கி முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திபங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டின் முன்னுதாரண மூடாகஎடுத்துக் காட்டியுள்ளது.

“பாரம்பரியக்கலை வடிவங்களைப் பயின்று வருகின்ற சமூகங்களை வலுப்படுத்தும் வகையிலும், சமுதாயமயப்படுத்தும் வகையிலும் மீளுருவாக்கம் செய்வதன் மூலம் கலையைச் சமகாலத்திற்குரியதாக ஆக்கும் வகையிலும்: அதைப்பயின்றுவரும் மக்களை சமகால உலகை எதிர்கொள்ளத்தக்கவகையிலும் சுயாதீனமானவர் களாகவாழத்தக்கவகையிலுமான சமூக மாற்றம் ஒன்றைப்பற்றிய” (சி.ஜெயசங்கர், 2011:41-42) நோக்குடன் 2002/2003காலப்பகுதியில் இலங்கைகிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறைவிரிவுரையாளர் சி.ஜெயசங்கர் அவர்களும், இலங்கையின் மட்டக்களப்புசீலாமுனைக் கிராமத்தின் கூத்துக் கலைஞர்களும் இணைந்து முன்னெடுத்த கூத்துமீளுருவாக்கத்திற்கானபங்கு கொள் ஆய்வுச் செயற்பாடு இதனை வெளிப்படுத்திநிற்கின்றது.

இவ்விதமாக கூத்துமீளுருவாக்கம் செயற்பாடாகவும் கோட்பாடாகவும் 2002/2003 காலப்பகுதியிலிருந்து ஈழத்தில் முன்மொழியப்பட்டதைத் தொடர்ந்து உயர்கல்வி நிறுவனங்களின் ஆற்றுகைக்கலைசார்ந்தகலைத் திட்டங்களில் இக்கோட்பாட்டினையும் அதன் பிரயோகங்களையும் முன்னெடுக்கும் நிலைமைகள் வலுப்பெற்றன. இந்தவகையில் இலங்கைகிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையிலும், சுவாமிவி புலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திலும் கூத்துமீளுருவாக்கம் செயல்முறைக் கற்றலாக இடம் பெறத்தொடங்கியது. இதன்காரணமாக நாடகம் மற்றும் நுண்கலைகளில் சிறப்புக் கற்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் கூத்துமீளுருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபடும் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

குறிப்பாகபாரம்பரியக் கலைஞர்களுடன் சேர்ந்து காலத்தேவைக்குரியபாடு பொருளைக் கொண்டபுதிய கூத்துக்களை உருவாக்கி அவற்றினைப் பயின்றுஅரங்கேற்றம் செய்வதற்கான வாய்ப்புக்களை இக்கற்கை மாணவர்களுக்கு வழங்கியது. இத்துடன் பாரம்பரியக் கலைஞர்கள் வருகைதருகலைஞர்களாக பல்கலைக் கழகங்களில் கற்பிப்பதற்கானவாய்ப்புக்களை

உருவாக்கியது. இதன்காரணமாக இலங்கையில் மட்டக்களப் புகிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமிவிபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் புதிய கூத்துக்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. இவற்றுள் சங்ககாலத்தில் வாழ்ந்த ஔவையை வெளிப்படுத்தும் வகையில் "ஆளுமையான ஔவையாள்" எனும் வடமோடிக் கூத்துஉருவாக்கம் பெற்று அரங்கேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆளுமையான ஔவையாள் - கூத்துப்பனுவலின் உருவாக்கமும் ஆற்றுகையும்

2017 ஆம் ஆண்டுகுறித்த நிறுவகத்தின் நடன நாடகத் துறையில் நாடகத்தில் சிறப்புக் கற்கையில் ஈடுபட்ட இறுதி வருடமாணவர்களின் ஒரு தொகுதியினரும் அண்ணாவியார் சீ. அலக்ஸ்சாண்டர் மற்றும் கூத்துக்கலைஞர்களானத. முத்துலிங்கம், து.கௌரீஸ்வரன் ஆகியவர்களும் இணைந்து செயலாற்றியதனூடாக இக்கூத்து உருவாக்கப்பட்டிருந்தது. ஔவை பற்றிய கட்டமைப்புமற்றும் கட்டவிழ்ப்புக்கள் பற்றியகற்கைமற்றும் உரையாடல்களைத் தொடர்ந்து சங்ககாலத்தில் வாழ்ந்த ஔவையினை வெளிப்படுத்தும் வகையிலான கூத்துப்பனுவல் ஒன்று உருவாக்கப்பட்டு மாணவர்களால் பழகி அரங்கேற்றப்பட்டது. அண்ணாவியார், மூத்த கூத்தர்கள், மாணவர்கள் எனப்பலரும் பங்கு பற்றிய குழுநிலையிலானகலந்துரையாடலூடாகத் தீர்மானிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து குறித்த கூத்தின் எழுத்தாக்கத்தைது. கௌரீஸ்வரன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

மட்டக்களப்பில் பயிலப்பட்டுவரும் வடமோடிக் கூத்தின் கட்டமைப்பில் சங்ககாலத்தில் வாழ்ந்த ஔவையை மையப்படுத்தி ஆக்கப்பட்ட இக்கூத்தில் வடமோடிக்கேயுரிய போர்சார்ந்த சம்பவச் சித்திரிப்புடன் கதையாக்கத்தைப் புனையவேண்டும் என்றுமுதலில் முடிவுஎடுக்கப்பட்டது. இதற்கிணங்க சங்க காலத்து ஔவையின் பாடல்களை ஆராய்ந்து சம்பவங்களை விபரித்துள்ள ஆய்வாளர் களுடைய எழுத்துக்கள் வாசிக்கப்பட்டன இதன்பிரகாரம்

"சங்கப்பெண் புலவர்களுள் முக்கியமானவராகப் பிரபலமானவராகக் கொள்ளப்படுபவர் ஔவையார். சங்ககாலப் புலவர்களானகபிலர்,பரணர்,நக்கீரர் ஆகியோருக்கு இணையான பெரும்புலவராகவிளங்கியவர். பெண்கள் பாடியமொத்தப்பாடல்களுள் (196) ஔவையார் இயற்றியதாகஜம்பத்தொன்பது (59) பாடல்கள் சங்க இலக்கியத் தொகுப்பினுள் உள்ளன. இவர் அகப்பாடல்களையும் (26) புறப்பாடல்களையும் (33) பாடியுள்ளார். இதுவே இவரதுமுக்கியத்துவத்திற்கும் சிறப்பிற்கும் சான்று. சங்ககாலஔவையார் அதியமானை இளமைமுதல் இறப்புவரைபாடியவர் (22 பாடல்கள்) அகப்பாடல்களின் மூலம் சங்ககாலமக்களின் அகவாழ்வினையும், புறப்பாடல்களின் மூலம் இவரதுஅரசியல் அறிவையும் மன்னர்களோடு இவருக்கிருந்தநட்பையும் அறிந்துகொள்ளமுடிகிறது" (நதிராமரியசந்தனம், 2015)

“அதியமானின் போர்முனைச் சாதனைகள் பற்றிப்பாடிய ஔவை அவனதுநம்பிக்கைக்குப் பாத்திரமாகிறார். இதன் போது தொண்டைமானிடம் தூது அனுப்பும் அளவுக்குநம்பிக்கைக்கும் நட்புக்கும் மதிநுட்பத்திற்கும் உரியவராகிறார். இங்கேஔவைஎன்றபெண் படிமம் ஆளுமையின் அடையாளமாகவும் திகழ்கிறது. உள வலிமையும் உடல் வலிமையும் வாய்க்கப்பெற்றநங்கையாகஎமக்குள் படிமமாகிறார்.” (கொற்றவை, 2014)

“தொண்டைமானிடம் தூது சென்ற ஔவை, மதிநுட்பத்துடன் வஞ்சப்புகழ்ச்சியில் பாடல்பாடி போரைநிறுத்தியது அவரது ஆளுமையின் பாற்பட்டது. இந்த ஆளுமைவயதானபாட்டியாக இருக்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. இன்றைய வெளிவிவகார அமைச்சுபதவியிலுள்ளோர் கடமையைஒத்தது இது. மரணத்தை வெல்லும் நெல்லிக்கனியை அதியமான் ஔவைக்குக் கொடுத்தது நட்பின் உச்சம் என்று கொள்ளப்படுகிறது. ஔவை என்றதனிப் பெண்ணுக்கு வழங்கிய தல்ல அது, அந்தப் புலமையும், மதிநுட்பமும் தன்நாட்டுக்கு எப்போதும் தேவைஎனக்கருதிவழங்கிய வெகுமதி”(கொற்றவை, 2014)

“அரசியல் ஆளுமையுள்ளஒரு இரும்புப் பெண்ணாகஔவை இங்கேநிற்கிறார்”(கொற்றவை, 2014)

எனும் ஆய்வாளர்தம் கருத்துவிளக்கங்களை ஆதாரமாகக் கொண்டுஅதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையில் நடைபெறவிருந்த போரைத்தடுத்துநிறுத்திய ஔவையின் இராசதந்திரப் புலமைத்துவத்தைவெளிப்படுத்துவதனைமையக்கருவாகக் கொண்டு கூத்தினைப்புனைவது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ஔவையை ஆளுமையான ஔவையாள் எனச்சுட்டுவதுஎன்றும் முடிவுஎடுக்கப்பட்டது.

இதன்படி அதியமான் எனும் மன்னன் தன்னுடையநாட்டின் மீது தொண்டைமான் எனும் மன்னன் படையெடுக்க ஆயத்தமாவதைஅறிந்து அப்படையெடுப்பைத் தடுக்கும் பொருட்டு ஔவையை அழைத்துதூது அனுப்பி தொண்டைமானுடன் பேசச்செய்து பேரழிவைத் தடுத்து நிறுத்துவதாகவும். இந்த இராசதந்திரப் போராட்டத்தில் ஆக்கபூர்வமாகச் செயலாற்றிய ஔவைக்கு அரியநெல்லிக்கனியைக் கொடுத்து மாண்பு செய்வதாகவும் கதையினை உருவாக்கிக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற் கிணங்ககாப்புவிருத்தம், நாடக நோக்கவிருத்தம், கட்டியக்காரன் வரவு, அதியமான் கொலுவரவு, தூதுவன் வரவு, அதியமான் தூதுவன் உரையாடல், ஔவையாள் வரவு, ஔவையாள் அதியமான் சந்திப்பு, தொண்டைமான் கொலுவரவு, ஔவையாள் தேரில் வருதல், ஔவையாள் தொண்டைமான் சந்திப்பு,ஔவையின் நோக்கம் நிறைவேறல், பறையறைவோன் வரவு, ஔவையை அதியமான் மாண்புசெய்தல், வாழித்தரு என்ற பகுப்புக்களுடன் கதைச் சித்திரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

ஔவைப் பாத்திரத்தைபெண் மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்தனர். பெண் பாத்திரங்களின் ஆளுமை வெளிப்பாட்டிற்குரிய வாறுவரவுத்தாளக்கட்டு, ஆட்டக்கோலங்கள், பாடலாக்கம், நடிப்பு முறைமை என்பனவடிவமைக்கப்பட்டு ஔவையின் ஆளுமையை வெளிக்கொணரும் வகையில் ஆற்றுகை இடம்பெற்றிருந்தது. அதாவது ஆணாதிக்கநோக்கில் பெண்களைச் சித்திரிக்கும் தாளக்கட்டுக்கள்,பாடல் மெட்டுக்கள், நடிப்புமுறைமைகளிலிருந்துவிலகி கூத்துமீளுருவாக்கம் முன்மொழிந்துள்ள பெண் பாத்திரமீளுருவாக்க அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஔவைப் பாத்திரம் படைக்கப்பட்டது. அறிவும், அழகும், ஆளுமையும் நிறைந்த இளம் பெண்ணாக ஔவையாள் தோற்றப்பொலிவு பெறுவதற்கேதுவாக உடைஒப்பனை தீர்மானிக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழகவளாகத்தில் இக்கூத்தின் சதங்கையணிவிழாவும், அரங்கேற்றமும் சிறப்புறநடந் தேறியிருந்தது.

**முடிவுரை:**

பாரம்பரியக் கூத்தரங்கு சமூகத்தின் உறுப்பினர்களிடையேகருத்துக்களைப் பரவலாக்கி அவற்றினைவேர் கொள்ளச் செய்வதில் பாரிய செல்வாக்கினைச் செலுத்திவருகின்ற உள்ளூர்க்கலைவடிவமாகும். எனவே சமகால நோக்கிலானகருத்தியல்களைப் பரவலாக்கம் செய்வதற்கு கூத்தரங்கைவலிமையான சாதனமாகமீளுருவாக்கி முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகி உள்ளது. கூத்தரங்கு பற்றிய கற்கையும் இத்தகைய நோக்கில் செயல்மையம் சார்ந்ததாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. ஔவையினை கூத்தில் கொணரும் கூத்து மீளுருவாக்ககற்கை ஔவைபற்றியமீள் வாசிப்புக்களுக்கும், ஔவை பற்றிய புதிய உருவாக்கங்களுக்கான அறிவையும் அனுபவங்களையும் வழங்கியுள்ளது. குறிப்பாகசங்ககாலத்தில் வாழ்ந்த ஔவையினைப் பற்றிய அறிமுகத்தைச் சமூகத்தின் சாதாரணமனிதர்களிடையேபரவலாக்கஞ் செய்வதற்கும் இதனூடாக ஏற்கெனவே கட்டமைக்கப் பட்டுள்ளவயது முதிர்ந்த ஔவையார் எனும் மூதாட்டிபற்றியபுனைவைக் கட்டவிழ்ப்பதற்கும் உரியகலைவழிச் செயற்பாடாக இனங்காணப் பட்டுள்ளது. ஔவையாரின் கட்டமைப்பு பற்றி சமூகத்தின் அங்கத்தவர்களிடையே சிந்தனைக் கிளறல்களை உண்டு பண்ணி சமூகத்துடன் உரையாடுவதற்கானவாய்ப்புக்களையும் வெளிகளையும் அகலத் திறந்துள்ளது.

**ஆதாரங்கள்**


[1] சித்திரலேகாமௌனகுரு, (2007),பெண் அனுபவம் இலக்கியம்,விபுலம் பதிப்பகம்,ஞானசூரியம் சதுக்கம்,மட்டக்களப்பு,

[2] இன்குலாப் நாடகங்கள், 2000

[3] சி.ஜெயசங்கர், (2011),கூத்துமீளுருவாக்கம்,ஈழக்கூத்தின் புதியபரிமாணம்,கருத்து=பட்டறை,மதுரை.

[4] நதிராமரியசந்தனம்.,(2015) சங்ககாலஔவையார் பாடல் ஒருபன்முகநோக்கு,நிவேதினி, இதழ் 16, பக் 59 - 79

[5] http://paadini.blogspot.com/2014_05_25_archive.html